**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சிதம்பரம்.**

முன்னிலை:-செல்வி.எஸ்.பத்மாவதி , ML.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ம் நாள் செவ்வாய்கிழமை
இ.ம.எண்.630/2024 இன் அ.வ.எண்.61/2018

1. யாசோதை அம்மாள் (இறந்தார்)
2. சண்முகம் ...... மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1. மாவட்ட பதிவாளர்,
மாவட்ட பதிவாளர் அலுவலகம், சிதம்பரம்
2. சார் பதிவாளர்,
சார் பதிவாளர் அலுவலகம், சிதம்பரம்,
3. பிச்சையம்மாள் ...... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 08.10.2025 அன்று என் முன்னர் இறுதியாக விசாரணைக்காக வந்த போது மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.N.ராஜேந்திரன் அவர்கள் அஜராகியும், 1, 2 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசுதரப்பு வழக்கறிஞர் திரு.K.S.இளங்கோவன் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டு, ஆவணங்களை பரிசீலனை செய்து, இதுநாள்வரை இந்நீதிமன்றத்தின் பரிசீலனைகுட்பட்டு, இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு பிறப்பிக்கும்.

<u>உத்தரவு</u>

உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 6 பிரிவு 17-ன் படி இம்மனு மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட மனுவின் சுருக்கம்**

அசல் வழக்கு நிரந்தர உறுத்துக்கட்டளைக்காக தாக்கல் செய்து, நிலுவையில் இருக்கும்போது முதல் வாதி யாசோதை அம்மாள் இறந்து விட்டதால் தான் பதிவு செய்யப்பட்ட 18.12.2018 தேதியிட்ட உயிலின் அடிப்படையில் வாரிசு மனு IA.No.13/2024 தாக்கல் செய்திருந்திப்பதாகவும், IA.No.13/2024 ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும், மனுவில் உள்ள உத்தரவின்படி தன்னை வாரிசாக அங்கீகாரம் செய்து கொண்டு அசல் பிராதினை திருத்தம் செய்ய வேண்டப்பட்டுள்ளது.

**3. 1, 2 ம் எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட ஆப்சேபனையின் சுருக்கம்:-**

மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கதக்கதல்ல என்றும், ஆட்சேபணையில் வெளிப்படையாக ஒப்புக்கொணட அம்சங்கள் தவிர மற்றவை குறிப்பாக மறுக்கப்படுகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மனுதாரர் அபிடவிட்டில் காலமான தாயார் யசோதை அம்மாளுக்கு தான் மட்டும் சட்டமுறை வாரிசுதாரர் என்பதை ஆவண சாட்சியங்களுடன் நிரூபணம் செய்யப்பட வேண்டும் என்றும், காலமான யசோதை அம்மாளுக்கு மனுதாரர் மட்டும் தான் வாரிசு என்றும், வேறு வாரிசு இல்லை என்பதை நிரூபிக்கப்பட வேண்டும்

என்றும், ஆகையால் இம்மனு ஏற்புடையது அல்ல என்றும் மனு தள்ளுபடிக்குரியது என குறிப்பிடப்பட்டுள்ளது.

4. இருதரப்பிலும் சாட்சிய சான்றாவணம் தாக்கல் இல்லை.

5. மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவெனில், மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனு அனுமதிக்கதக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

6. தீர்வு

இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. முதல் வாதி யாசோதை அம்மாள் இறந்து விட்டதால் தான் பதிவு செய்யப்பட்ட 18.12.2018 தேதியிட்ட உயிலின் அடிப்படையில் வாரிசு மனு IA.No.13/2024 தாக்கல் செய்திருந்ததாகவும், அதில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும், மனுவில் உள்ள உத்தரவின்படி தன்னை வாரிசாக அங்கீகாரம் செய்து கொண்டு அசல் பிராதினை திருத்தம் செய்ய வேண்டிருப்பதையும் மாறாக, எதிர்மனுதாரர் தரப்பில் காலமான யசோதை அம்மாளுக்கு மனுதாரர் மட்டும் தான் வாரிசு என்றும், வேறு வாரிசு இல்லை என்பதை நிரூபிக்க வேண்டும் என குறிப்பிட்டு ஆட்சிபிக்கப்பட்டிருப்பதையும் கருத்தில் கொண்டு பார்க்கும்போது 2 ம் மனுதாரர் வாரிசு இல்லை என்று மறுக்கப்படவில்லை என்பதால், மேலும், ஏற்கனவே IA.No.13/2024 அனுமதிக்கப்பட்டுவிட்டது என்பதாலும், ஏற்கனவே தீர்மானிக்கப்பட்ட சேர்த்தல் திருத்தல் ( Formal consequential amendment) செய்துகொள்வதற்காக மட்டுமே இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பதாலும், மேற்சொன்ன காரணத்திற்காகவும் இம்மனுவை அனுமதிக்க இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

7. முடிவாக மனுதாரரின் இம்மனு அனுமதிக்கப்படுகிறது, செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் நேரடியாக சொல்ல சொல்ல சுருக்கெழுத்து தட்டச்சரால் உடனுக்குடன் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 14-ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

(Sd/-S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை
மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:- இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள்:- இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் :- இல்லை

(Sd/-S.Padmavathi)
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சிதம்பரம்.

அசல்-நகல்-உத்தரவு
வ.வி.எண்.630/2024
இன்
அ.வ.எண்.61/2018
நாள்.14.10.2025